# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# உயர்பட்டப்படிப்புகள் பீடம்

## புதிய அனுமதிகள்

### கல்வியியல் முதுமாணி (Master of Education) 2023/24 (அணி XV) - யாழ்ப்பாண நிலையம்

மேற்படி சுயநிதிக்கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமும், பட்டப்பின் கல்விடிப்ளோமாவும்

**அல்லது**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் கல்விமாணிப் பட்டம்

**அத்துடன்**

- ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் குறைந்தபட்சம் **ஐந்து** ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்தபட்சம் **ஐந்து** ஆண்டுகள் அனுபவம்

**தெரிவுமுறைமை:**

- எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
  (எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையைப் பரீட்சிப்பதாக அமையும்)

**கற்கைக் காலம்** : ஒரு வருடம்

**மொழி மூலம்** : தமிழ்

**கற்கைநெறிக் கட்டணம்** : 185,000/- (5000/- மீள அளிக்கப்படும்)

**விண்ணப்பப்படிவக் கட்டணம்** : 1,000/-

**விண்ணப்ப முடிவுத்திகதி** : 22.12.2023

**விண்ணப்பப்படிவம் பெறும் முறை:**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் **(190152500001952)** என்னும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தைச் செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயரிற்கு விண்ணப்பப்படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் **www.grad.jfn.ac.lk** என்னும் பல்கலைக்கழக வலைத்தள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளம் மூலமாகத் தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயரிற்கு ரூபா1000/- பெறுமதியான காசுக்கட்டளையை மக்கள்வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு **(190152500001952)** செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**<u>விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் முறை:</u>**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் <u>22.12.2023</u> ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்